ஓம்

மஹா கணபதி துணை

பர்த்ருஹரி சிங்கார சதகம்

தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீமாந் ம. மாணிக்கவாசகம் பிள்ளை

அவர்கள் செய்யுள் வடிவமாக மொழிபெயர்த்த மூலமும்,

ஷெயார் இயற்றிய தெளிபொருள் விளக்க உரையும்.

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1925

விலை அணு 3

பர்த்ருஹரி சிங்கார சதகத்தின்

விஷய அட்டவணை

அரிச்சந்திர புராண வசனம்: அரிச்சந்திர புராண மூலத்தை அநுசரித்துத் தமிழில் நூதனமாக வசனப் படுத்தப்பட்ட அரிய நூல்; இனிய நடையில் கதை விரிவாக அமைந்தது: விலை ரூபா 1-8-0

அருணசல புராண வசனம்: அடியார்களின் பாவத்தைப் போக்கும் திருவண்ணமலை ஸ்ரீ அருணசலேசுவரரின்மீது பாடப்பட்டுள்ள ஷை புராணத்தின் கருத்தை எல்லோரும் எளிதில் அறிந்துணருமாறு, இனிய நடையில் வசன ரூபமாக இயற்றப் பெற்றது: விலை ரூபா 1

பிரபோத சந்திரோதய வசனம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கம்: விலை ரூபா 1

பிரபுலிங்கலீலை வசனம்: கவிச் சக்ரவர்த்தியாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச ஸ்வாமிகளியற்றிய அரிய நூலின் தமிழ் வசனம்: விலை ரூபா 1

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்: 82 பக்தர்களின் திவ்விய சரித்திரம்: விலை ரூபா 3

வேதப்பொருள் விளக்கம்: ருக் யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலுள்ள முக்கிய விஷயங்கள் அடங்கியது: விலை அணு 12. வேதப்பொருள் சாரசங்கிரகம்: அணு 4

பட்டினத்துப் பிள்ளையார் என்னும் திருவெண்காட்டடிகள் சரித்திரம் (வசனம்): விலை அணு 12

ஸ்ரீ பகவத்கீதை வசனம்: ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்த திவ்ய கீதையின் தமிழ் வசனம்: ரூபா 1-8-0

சைவசமய விளக்க வினவிடையும், சைவசமய ஆசௌச வினவிடையும்: விலை அணு 8

வீரசைவ வினவிடை: இதில் வீரசைவமதத்தின் சமயாசார இலக்கணங்கள் யாவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன: அணு 5

உ

பரமபதி துணை

பர்த்ருஹரி

சிங்கார சதகம்

மூலமும் உரையும்

மன்மத வணக்கம்

(வெண்பா)

யாவ னொருவன் அயன்முதன்முத் தேவரைப்பூ
ஏவதனால் வென்றே இறுமாக்குந்—தேவனந்த
மன்மதனை வந்திப்பேன் மன்னுஞ்சிங் காரப்பேர்
துன்னுசத கம்பொலியச் சூழ்ந்து.

(உரை) சிருஷ்டி, திதி, சம்மாரம் என்னும் முத் தொழிலையும் செய்ய வல்லவர்களானலும் பிரமன் விஷ்ணு சிவன்முதலிய முத்தேவர்களையும் தன்னுடைய பூவம்பால் சரசுவதி முதலிய மூன்று பெண்களுக்கும் முறையே அடிமைகளாக்கி வெற்றிகொண்டு களித்திருக்கும் தேவனெவன்? அந்தத் தேவனும் மன்மதனை இந்தச் சிங்காரசதக மிடையூறின்றி முடியும்படி தியானித்து வந்தனஞ் செய்கின்றேன்.

(விசேஷவுரை) மன்மதனுருடைய புஷ்பபாண மகத்துவத்தால் சிவன் பார்வதியைத் தனது அரையுடலிலும், விஷ்ணு இலக்குமியைத் தனது மார்பிலும், பிரமன் சரசுவதியைத் தனது நாவிலும் வைத்துக்கொண்டிருப்பதே இங்குக் குறிக்கப்பட்டது.()

1-வது அதிகாரம்

பெண்கள் பெருமை

(வெண்பா)

புன்னகையால் கைகள் புரள்வதனால் நாணத்தால்
மன்னுமச்சத் தால்முகத்தால் வாட்கண்ணால்—இன்மொழி
போலி வெறுப்பொயிலால் பூவையர்கள் ஆடவரை [யால்
மாலியற் றிப்பிணிப்பார் மற்று.

(உரை) புன் சிரிப்பாலும், கைகளைப் புரட்டுவதனாலும், கூச்சத்தாலும், பயத்தாலும், முக நயத்தாலும், வாள்போற் கூரிய கடைக்கட்பார்வையாலும், நய மொழியாலும், போலி வெறுப்புரையாலும், சொகுசாலும், இன்னும் பல விதத்தாலும் பெண்கள் ஆண்மக்களை மயக்கித் தம் வசப்படுத்துவார்கள். (2)

(வெண்பா)

அரைக்கண் கடைக்கண் அரும்பார்வை பைய
உரைக்குமொழி நாண முயர்ந்து—நிரைக்கின்ற
புன்னகைஒய் யாரம் பொருந்துநடை மாதர்க்குப்
பொன்னகைபோ லுள்ள பொருள்.

(உரை) கடைக்கண்ணால் அரைப்பார்வை பார்த்தல், இனிமையாய் ஈனசுரத்தோடு பேசுதல், நாண நிறைந்த புன்னகை, சிங்காரமாய்க் குலுக்குநடை முதலியவைகள் பெண்களுக்கு இயற்கையாயுள்ள பொன்னகைபோற் சிறந்த பொருள்களாம். (இவைகளால் அவர்கள் ஆடவரை வசப்படுத்துவார்கள்.) (3)

(கலிவெண்பா)

கருவிழியை மேலேற்றிக் காட்டுவாள் ஓர்சார்
உருவுனொந்து விழ்ந்திடுவாள் ஓர்சார்—திருமடந்தை

ஒக்குமிவள் நாணால் ஒருசார் தலைவளைப்பாள்
மிக்கஒயில் ஓர்சார் விளக்குவாள்—தக்கமுகச்
செந்தா மரையைத் தெரிவிப்பாள் ஓர்சார்கண்
அந்தா மரைநீல மாமென்று—சந்தேகம்
கொள்ளத் திருப்புவாள் கோலம் இதுவென்று
விள்ளப் புகுவதெலாம் வீண்.

(உரை) திருமகளுக்குச் சமானமான இவள் தன் கண்ணிற் கறுப்புவிழியை மேலேற்றி யோரிடத்தில் காட்டுவாள்; ஓரிடத்தில் தன் உருவம் துவண்டு வீழ்வாள்; ஓரிடத்தில் வெட்கத்தால் தலை குனிவாள்; ஓரிடத்தில் மிகுந்த ஒயிலால் தன் சொகுசைக் காட்டுவாள். ஓரிடத்தில் தன் முகத்தாமரையைக் காட்டுவாள்; ஓரிடத்தில் தன் கண்களைக் கண்டோர் நீலமலரோ என்று சந்தேகங் கொள்ளும்படி திருப்புவாள். ஆகையால், பெண்களின் கோலத்தை விளம்புதல் வீணாகும் (அரிது என்றபடி.) (4)

(வெண்பா)

மதிமண் டலமுகமும் வாரிசநேர் கண்ணும்
மதிபொன்போல் மேனி வனப்பும்—சுதிவண்டை
வெல்லும் அளகமும் வேழநிகர் மார்பகமும்
ஒல்லும் இனிய உரைவழக்கும்—நல்ல
செயற்கையுள்ள இந்தச் சேயிழைக்கு நீங்கா
இயற்கையா யுள்ள எழில்.

(உரை) சந்திரமண்டலம்போல் முகமும், தாமரைபோற் கண்களும், உயர்வாக மதிக்கக்கூடிய தங்கம்போல் மேனி நிறமும், கீதம் பாடும் வண்டை வெல்லும் கூந்தலும், யானை மத்தகத்தையொத்த மார்பிடமும், இனிமையாகிய வார்த்தை வழக்க

மும், நற்குண நற்செய்கையுள்ள இந்த மங்கைக்குப் பிறவி தொட்டு இயற்கையாயுள்ள அலங்காரங்களாம். (5)

(வெண்பா)

முகத்திற் சிறுநகைப்பு மொய்கலக வாட்கண்
சுகத்திற் சிறந்ததீஞ் சொற்கள்—உகக்குமிடை
அங்கைப் பிடிநடையிங் காமிவற்றில் யாதுசிறு
மங்கைக்கி யாது வனப்பு.

(உரை) முகத்திலுள்ள புன்னகை, கலக விழிகள், காதுக்கினிய மதுரமொழிகள், அழகிய துதிக்கையையுடைய பெண் யானையைப் போன்ற ஒய்யாரநடை முதலியவைகளில் இடையழகும் இளம்வயதுமுள்ள இம் மங்கைக்கு அழகு தாராதது எது? (எல்லாம் அழகாகவே இருக்கும்.)

(வி - ரை) 'உகக்குமிடை அங்கைப்பிடி' என்பது 'அழகிய கைப்பிடி யளவு' என்றும் பொருள் தருவது காண்க. (6)

(கலிவெண்பா)

நாகரிகர் தம்வயதில் நாடத் தகுவதெது
மோகமுடன் மங்கை முகமதியம்—யோகமுடன்
மோத்தற் குரியவையில் முக்கியமா யுள்ளதெது
ஏத்தற் குரியமங்கை யின்னுயிர்ப்பாஞ்—சோத்திரத்தில்
மேன்மையாய்க் கேட்பதெது மெல்லியலின் கண்டுமொழி
பான்மையா யுண்பதெது பாவையிதழ்த்—தேன்மதுரம்
தீண்டத் தகுபொருளில் திவ்வியமாய் உள்ளதெது
காண்டற் கரியவெழிற் கன்னியுடல்—வேண்டியென்றும்
சிந்தனைசெய் தக்கதெது தேன்மொழியின் ஒய்யாரம்
வந்தனைசெய் தக்கதவள் வாய்ப்பு.

(உரை) நாகரிகபுருஷர் நல்ல வயதில் ஆவலாய் நாடிக் காணத் தக்க தெது? மங்கைப்பருவப் பெண்ணின் மதிமுகம். சந்தோஷமாய்ப் மோக்கக்கூடியவைகளில் முக்கியமாயுள்ள தெது? புகழ்தற்குரிய பூவையின் சுகந்த வாடை. காதில் விசேஷமாய்க் கேட்பதெது? அவளுடைய கற்கண்டு போன்ற இன்சொல். மேலாக உண்பதெது? மெல்லியலின் உதட்டில் ஊறும் தீந்தேன். தீண்டத்தக்க பொருளில் சிறந்த தெது? காணுதற்கரிய கன்னிகையின் திருமேனி. எக்காலத்தும் விரும்பிச் சிந்திக்கக்கூடிய தெது? இலங்கிழையின் ஒய்யார உருவம். ஆகையால், அப்படிப்பட்டவளுடைய வாழ்க்கையை உகந்து நாம் வந்தனஞ் செய்யவேண்டும். (7)

(வெண்பா)

காற்சிலம்பாற் கைவளையால் காஞ்சியாற் கல்லென்று
மேற்கிளம்பு மோசை வெருட்டியமான்—போற்கட்
கடைப்பார்வை யால்மாதர் கட்டிப் பிடிப்பார்
தடைப்படா தாடவரைத் தாம்.

(உரை) காலி லணிந்த சிலம்பாலும், கையி லணிந்த வளையாலும், இடையி லணிந்த மேகலாபரணத்தாலும், மேலெழும் ஓசையால் மருண்ட மான்போன்ற தமது கட்கடைப் பார்வையால் மாதர்கள் ஆடவரைத் தடையில்லாமற் கட்டிவிடுவார்கள். (ஆடவர்களில் யார்தாம் மாதர்களின் மருண்ட மான் கண்வலையில் அகப்படார்கள்?) (8)

(வெண்பா)

குங்குமத்தின் சாந்து குமுகுமென்று தான்மணக்கத்
தங்குமுத்தின் மாலை தளதளென்ன—நங்கைமலர்ப்
பாதச்சிலம் பொலிக்கப் பார்மேல் எவர்மயங்கார்
காதற் பெருக்கிற் கலந்து.

(உரை) குங்குமச் சாந்து குமுகுமென்று மணக்கவும், மார் பிற் றங்கிய முத்துமாலை தளதளவென்று ஒளிவீசி ஆடவும், பூப் போல் மெல்லிய பாதச்சிலம்பு கல்கல்லென்று ஒலிக்கவும் நங்கை நடக்கையில் இவ் வையகத்தில் யார்தாம் காதல் வெள்ளத்தில் வீழ்ந்தாழ்ந்து மயங்கார்? (யதீந்திரர்களையும் பெண்கள் தம் வசப் படுத்திக்கொள்வார்கள்.) (9)

(வெண்பா)

மெல்லியலார் பெண்களெலாம் மெய்வலியில் லாரென்று
சொல்லு வார் பாவாணர் சும்மாதாம்—வல்லசுரர்
தம்மைவென்ற இந்திரனைத் தாம்வென்றார் மாதரெனில்
அம்மவவர் போல்வலியார் யார்.

(உரை) "பெண்களெல்லாம் மிருதுவானவர்கள், சரீரபலம் இல்லாதவர்கள்" என்று பாவாணர் சும்மா சொல்லுவார்களன்றி உண்மையல்ல. பலமுள்ள அரக்கரை வென்ற இந்திரனையும் பெண் கள் மயக்கித் தம் வசப்படுத்தி வென்றார்கள் என்றால் அவர்களைப் போல் பலமுள்ளவர்கள் இவ் வுலகில் வேறு யார் இருக்கின்றார் கள்? (இல்லை என்றபடி.) (10)

(வெண்பா)

பெண்களுக்காண் மக்கள் பெருஞ்சே வகரோபெண்
கண்களுக்குட் பட்டுக் கருத்தாயப்—பெண்களுக்குக்
குற்றேவல் செய்குவார் கோணு தவர்நிரம்பக்
கற்றோரே யானாலுங் காத்து.

(உரை) பெண்களுக்கு ஆண்கள் பெரிய வேலைக்காரர்களோ, என்னவோ? பெண்களுடைய கண்வலைக் குள்பட்ட ஆண்கள் நன் றாய் வாசித்தவர்களானாலும் மனமுவந்து, அந்தப் பெண்களுக்குக்

குற்றேவல் கோணமற் செய்து காப்பார்கள். (பெண்களின் கடைக் கண் பார்வையின் மகத்துவம் இது.) (11)

(கலிவேண்பா)

பெண்மணிநின் கேசம் பிறழா தொழுங்காகும்
கண்மணிகள் வேதக் கருத்துடைய—பண்மணக்கும்
வாய்ப்பொறிதான் தூயகுண வாய்ப்புடைய தாகும்நின்
ஏய்ப்புடைய மார்பில் இருப்பாக— ஆய்ப்புடைய
மாமுனிவர்க் காதாரம் மன்னும் மடந்தாய்நின்
நேமநிலே சாந்த நிலேயிவ்வா—றுமெனினும்
மோகம் பெருக்கியெம்மை மூடர்க ளாக்குவதால்
தேகம் நிலேகுலேந்து சீர்கெட்டுப்—போக
உறுதி யிறுதியாய் ஓடுகின்ற தெப்படியோ
நிறங்கரிய கூந்தல் நெறிந்து—செறிந்து
முடிந்திருக்கும் வாயில் முறுவல் ஒழுங்காய்ப்
படிந்திருக்கும் காதளவிற் பாய்ந்து—முடிந்திருக்குங்
கண்கள்நின் பால்வீடு கட்டுமுத் தாரத்தால்
ஒண்மை மிகுந்திருக்கும் உண்மையினுல்—என்மையாய்
ஓங்கும் அநுராகம் உன்னுடம்பால் எங்களுக்கு
ஈங்கிறும்பூ தல்ல இது.

(உரை) ஏ பெண்மணீ! உன் கூந்தல் குலேயாமல் மெத்த ஒழுங்காய்ப் படிந்திருக்கின்றது; உன் கண்மணிகள் வேதோப நிஷத்தின் கருத்தை அடக்கிக்கொண் டிருக்கின்றன. உன் னுடைய திருவாய் பரிசுத்த குணகணங்களேப் பொருந்தியிருக்கின் றது. உனது மார்பில் இசைந்து பொருந்திய இருப்பான பால் வீடுகள் மாமுனிவர்க்குக் காயசித்தியாதாரமா யிருக்கின்றன. ஆனுலும், அவைகள் மோகத்தைப் பெருக்கி யெங்களே மூடர்கள்

ஆக்கிவிடுகின்றன. ஆகையால், நாங்கள் சரீரநிலை குலைந்து தாறுமாறாய்ச் சீர் கெடுகின்றோம். எங்கள் வைராக்கியமெல்லாம் போய் விடுகின்றது. இது எப்படி என்று ஆச்சரியமா யிருக்கின்றது. ஆனாலும், ஒருவாறு காரணஞ் சொல்லுகிறேன். உன்னுடைய கரிய நிறக் கூந்தல் நெறிந்து செறிந்து முடிந்து அழகாய் விளங்குகின்றது. வாயிற்பற்கள் வரிசையாய் அமைந்திருக்கின்றன. மார்பிற் பால்வீடு முத்தாரத்தழகு மிகுந்து தோன்றுகின்றன. இந்த உண்மையினால் உன் உடம்பு எங்களுக்கு மிகுந்த அநுராகத்தை உண்டாக்குகின்றது. ஆகையால், நாங்கள் வைராக்கியந் தப்பி வாழ்வது அதிசயம் அன்று. (12)

(வெண்பா)

உலகில்வில் லாளிகள் உண்மையாய் வில்வில்
இலகும் சரந்தொடுத் தெய்வார்—நிலையாய்நீ
கண்ணுக் கெட்டாவெங் கருத்தே இலக்காயுன்
பண்பிற் குறித்தெய்வாய் பார்த்து.

(உரை) உலகத்தில் வில் வித்தையிற் சிறந்தோர் விளக்கமான வில்லில் அம்பு தொடுத்துக் கண்ணுக்குத் தோற்றும் பொருளை எய்வார்கள். நீயோ ஒரு நிலையா உன்கண்ணுக் கெட்டாத எம் மனதே இலக்காக உனது அழகாதி குணங்களால் எய்கின்றாய்! (இது அதிசயம் என்றபடி.) (13)

(வெண்பா)

பகலிரராக் காலத்தில் பானுமதி மீன்கள்
மிகவிருந்து மானேர் விழியாள்—அகன்றதனால்
எங்குமிருள் மூடி யிருக்கின் றதுதோழா!
சங்கடத்தி லாழ்வேன் தவித்து.

(உரை) "பகலில் வெளிச்சந் தர சூரியனும், இரவில் சந்திரனும் நக்ஷத்திரங்களும் மிகுதியா யிருந்தும் மான்விழித் தேன் மொழியாகிய என் காதலி அகன்றதனால், எங்கும் இருள்மூடி யிருக்கின்றபடி நான் 'சங்கடப்பட்டுத் தவிக்கின்றேன். ஆ, என் தோழா!" என்று காதலனொருவன் தன் தோழனோடு சொல்லிக் கொண்டான். (14)

(வெண்பா)

திரண்டுருண்ட மார்பும் தீரக் கறுத்த
இரண்டு விழியும் இதழும்—வெருண்டென்னை
வாடச் செய்தாலும் வகையாகச் செய்திடுக
நீடச் சிறுத்தவிடை நேராக—மூடிப்
பொதுவிடத்தி லேயிருந்தும் பூண்டென்னை வாட்டும்
இதுவென்ன ஞாயமோ இங்கு.

(உரை) திரண்டுருண்ட மார்பும், மெத்தக் கருமையான இரண்டு கண்களும், உதடும் நான் மருண்டு வாடும்படி வருத்தினாலும் வருத்தட்டும். மெத்தச் சிறுத்து மறைந்துள்ள இடையானது நேராக மூடிப் பொதுவிடத்திலிருந்தும் என்னை ஓரவஞ்சனை மேற் கொண்டு வருத்தும் இது என்ன ஞாயமோ, இங்கு எனக்குத் தெரியவில்லை. (ஏ, காதலீ! உன்னை நான் பெறாததனால், இவ் வங்கங்கள் என்னை வருத்துகின்றன. ஆகையால், நீ கடைக்கணித்துக் காப்பாயாக என்றபடி.) (15)

(வெண்பா)

முகஞ்சந் திரகாந்த மொய்நீலங் கண்கள்
தகும்பதும ராகங்கை தான்பெற்—றகமகிழ்ந்திப்
பெண்மணியென் கண்மணிபோல் பீடார் மணிமாய்க்
கண்ணெதிரே தோன்றுங் கலந்து.

(உரை) சந்திரகாந்த மணிபோன்ற முகத்தையும், முழுநீல மணிபோன்ற கண்களையும், தகுதியான பதுமராக மணிபோன்ற கைகளையும் பெற்றதனால் மனமகிழ்ந்து, இந்தப் பெண்கள் சிகாமணியார் என் கண்மணிபோல், பெருமை பொருந்திய மணிமயமாய் என் கண்ணெதிரிற் கலந்து தோன்றுவார். (காக்ஷி.) (16)

(வெண்பா)

மார்பிற் குருவாம் வதனத்திற் சந்திரனும்
சீர்பாதந் தன்னிற் றிகழ்சநியாம்—ஏர்கூர்
கிளிமொழியார் தோற்றம் கிரகவட்டம் போலும்
களிமொழியார் ஆவார் கலந்து.

(உரை) மார்பிடம் சுவர்க்கம்போன் றுயர்ந்திருப்பதால், குரு ஸ்தானமாம்; முகம் சந்திர ஸ்தானமாம்; பாதம் மந்தகதியாய் நடப்பதால் சநி ஸ்தானமாம். ஆகையால், இந்தக் கிளிமொழியார் என்னெதிரில் கிரகவட்டம்போல் தோன்றி வெருள்கின்றார். (இனிக் களி மொழியாராய் என்னைக் கலந்துநிற்பார்.) (17)

(வெண்பா)

மார்பு பருத்திருந்தென் மான்கண் கறுத்திருந்தென்
சீர்சால் முகந்தான் தெளிந்திருந்தென்—தேர்மனமே!
சும்மா கிடைக்குமோ சுந்தரியின் கூட்டுறவு
அம்மா தவஞ்செய் அறிந்து.

(உரை) மார்பு பருத்திருக்கிற தென்றும், கண்கள் கறுத்திருக்கின்றன என்றும், முகம் தெளிந்து சிறந்திருக்கிறதென்றும் நீ வியந்தென்ன பிரயோஜனம்? ஓ, மனமே! சுந்தரியின் கூட்டுறவு உனக்குச் சும்மா கிடைக்குமா? இதை அறிந்து நீ தவஞ் செய். (அப்போது கிடைக்கும். இல்லாவிட்டால் கிடைக்காது என்றபடி.) (18)

(வெண்பா)

அலங்கார சேஷ்டையிவ் வஞ்சனமான் கண்ணி
அலங்கார மாய்ச்செய்வா ளந்தோ—அலங்கார
மங்கைப் பருவமிந்த மாந்தளிர் மேனிக்குப்
பொங்குமழ கீயுமிப் போது.

(உரை) இம் மை தீட்டிய மான்கண்ணி, சிங்கார சேஷ்டை சிறப்பாகச் செய்கின்றாள்; சிங்கார மங்கைப் பருவம் இந்த மாந் தளிர் மேனிக்கு இப்போது மிகுந்த அழகைத் தருகின்றது. (இப் போது தான் சிங்கார சேஷ்டை செய்யத் தொடங்கினாள் என்ற படி.) (19)

(வெண்பா)

மான்விழியின் தேன்மொழிகள் மாமதுர மாமவற்றால்
தான்கொண்ட காதலைத் தான்விளக்கும்—மீன்விழிதான்
சிங்கார மாகச் சிறந்திருப்பாள் காமுகர்க்
கிங்கா தரமா யிருந்து.

(உரை) மான் போன்ற விழியுடைய இம் மங்கையர்க்கரசி யின் தேன் மொழிகள், மிகவுந் தித்திப்பானவைகள். அவைகளால் இவள் தான் கொண்ட காதலைத் தானே தெரிவிக்கிறாள். இந்த மீனாக்ஷி, காமுகர்க்கு ஆதாரமாய் அலங்காரமாய்ச் சிறந்திருக்கின் றாள். (20)

2-வது அதிகாரம்

கூடற் சிறப்பு

(விரகதாபத்தால் வாடின மேனியுடன் தனித்து ஒரு மங்கை வனத்தில் வந்தாள்.)

(வெண்பா)

வந்தாளோர் மங்கை வனத்தில் நிலவெறிக்க
நொந்தாள் இடையில் நுடங்குந்தன்—முன்றானை
கொண்டுதன்னை மூடினாள் கோல மரநிழலைக்
கண்டுநின்று கொண்டாள் கரந்து.

(உரை) வனத்தில் மங்கை யொருத்தி வந்து நிலவெறிக்கக் கண்டு வருந்தினாள். அது தன்மேற் படாமல் தடுக்கத் தன் முன்றானையால் தன்னை மூடிக்கொண்டாள். அங்குள்ள அழகான மர நிழலைக் கண்டு அதில் மாறி மாறி நிலவுக்கு ஒளிந்து நின்று கொண்டிருந்தாள். (21)

(வெண்பா)

பாரா திருக்குமட்டும் பார்க்கவரு மோவென்று
கோராநிற் போம்பார்த்தால் கூடலை—நேராதோ
மங்கையென்போம் நேரின் மனமொத் திணைபிரியா
திங்கிருக்க வெண்ணுவோம் யாம்.

(உரை) மங்கையை நாம் பாராதிருக்குமட்டும், அவள் நாம் பார்க்க வருவாளோ என்று கோருவோம்; பார்த்தால், அவள் நம்மோடு கூடலைச் சம்மதியாளோ என்று எண்ணுவோம்; அதுவுங் கைகூடினல், அவளோடு மனமொத்து இணை பிரியாமல் என்றும் இருக்கமாட்டோமா என்று விரும்புவோம். (22)

(வெண்பா)

மல்லிகைப்பூ மாலை மகிழ்ந்தணிந்து மாமணச்சாந்
தொல்லு முடலில் உகந்துகொண்டு—நல்லமங்கை
தன்னைத்தன் மார்பில் தழுவுவோன் இவ்வுலகில்
மன்னுசுவர்க் கங்காண்பான் வாழ்ந்து.

(உரை) மல்லிகைப்பூ மாலையை மகிழ்ச்சியுடன் சூடி, சிறந்த மணம் வீசும் செஞ்சந்தனத்தை யுடலிற் பூசி, எழில் மிகுந்த எந்திழையை இறுகத் தன் மார்பிற் றழுவிக்கொள்வோன் இவ் வுலகில் சுவர்க்கங் கண்டு வாழ்வோன் ஆவான். (23)

(வெண்பா)

காதல் வளர்ந்து கருதரிய நாணமச்சம்
ஆதல் நிறைந்து அறிவுமிகுந்—தோதல்
அலங்கார மாக அனைத்தின்பம் நல்கல்
மலங்காத மங்கை வழக்கு.

(உரை) உண்மைக் காதல் அதிகரித்தல், எண்ணுதற்கரிய நாணமும் அச்சமும் நிறைந்த அறிவு மிகுந்து நாயகனுக்கு உறுதி கூறல், அழகாகப் பெண்சுக மனைத்தும் காதலனுக்குக் கொடுத்தல், இவைகள் அழகு முதலியவைகளிற் கெடாத மங்கையின் வழக்காகும். (24)

(வெண்பா)

ஆனந்த வாரிதியில் ஆழ்ந்து பரவசமாய்
ஊனந் தவிர்ந்தமங்கை ஒண்டொடியைத்—தானந்தா
வைப்பாகப் பெற்றுமலர் வாயமுதம் உண்பானை
ஒப்பாரார் வையகத்தில் ஓது.

(உரை) ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்து பரவசமாய் ஊனமின்றி, குணங்குலங் குறிகளிற் சிறந்த மங்கைப் பருவத்து மாண்

புள்ள நாயகியைப் பொன்போற் பெற்று, அவளுடைய மலர் வாய்த் தேனை மாந்தும் ஆண்மகனுக்கு இவ் வுலகில் யார் நிகரா வார்கள்? (இல்லை என்றபடி.) (25)

(வெண்பா)

கண்கள் செருகிக் கருதுசுர தத்திலாண்
பெண்கள் நுகரும் பெருஞ்சுகமே— கண்காண்
சுகாநு பவமென்று சொல்லுவா ரன்னோர்
மகாநு பவமா மதித்து.

(உரை) இளம் பருவத்து மங்கையும் ஆண்மகனும் கூடற் சமயத்தில், கண்கள் செருகி அரைக்கண் பார்வையால் அனுபவிக்கும் ஆநந்தத்தையே பரமாநந்தமாகப் பாவித்துக் கண்கண்ட சுகமென்று சொல்லுவார்கள். (26)

(வெண்பா)

ஆண்கள் கிழமாய் அதிகமூத் தாலுலகில்
மாண்மதன் கேளிசெய்வார் வாய்ந்தென்னல்—வீண்மொழி [யே
பெண்கள் தனம்வீழ்ந்து பேரிளம்பெண் ஆனக்கால்
மண்ணில் அதற்குதவார் மற்று.

(உரை) ஆண்கள் கிழமாய் அதிக மூத்தாலும் உலகத்திற் சிறந்த மன்மதக் கிரீடை செய்வார்கள் என்று சொல்லுதலும், பெண்கள் தனஞ் சரிந்து பேரிளம்பெண்களானல் சுரதலீலைக்கு உதவார்களென்று சொல்லி விதிக்காமையும் ஒழுங்கல்ல. (27)

(வெண்பா)

ஆசை கடலாம் அதனுழங் காண்பாரார்
தேசு பெறுமிளமை தேயுமுன்பே—மாசுகத்தைச்

காணுவார் நல்லறிவோர் காதலியும் நானுமெங்கள்
ஏனுலாம் வீடடைவோம் இன்று.

(உரை) ஆசை சமுத்திரம் போலாம்; அதன் ஆழங் காண யாராலாகும்? இளமை மாறுமுன்பே புத்திமான்கள் சுரத சுகத்தைக் காண்பார்கள். ஆகையால், நானும் என் காதலியும் எங்கள் வீட்டைச் சேர்ந்து (இப்போதே சுகாநுபவங் காண்போம்.) (28)

(வெண்பா)

இளமைபே ராசைக் கிருப்பிடமாம் பற்பல்
அளவிலாத் தீவினைக் காதாரம்—உளமலிமெய்ஞ்
ஞான வொளிக்கிருளாம் நண்ணுதுய ரக்கடலா
மேனுமிது வேசிறந்த திங்கு.

(உரை) இளம்பிராயம் (யௌவனம்) பேராசைக்கு இருப்பிடமாகும்; அளவற்ற பல பாவங்களுக்கு ஆதாரமாகும்; மனத்தில் உண்மை ஞானத்தை மூடும் இருளாகும்; பொருந்திய துன்பக் கடலுமாகும். ஆனாலும், இதுபோலச் சிறந்த பொருள் உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை. (29)

(வெண்பா)

மன்மதனை வந்தித்து மன்னும் சுகானுபவம்
தன்னை வளர்க்கின்ற தாயாகிப்—பொன்னைநிகர்
மங்கையருக் கின்பம் வழங்கிளமை வாய்ந்தெவனே
இங்கொருவன் உத்தமனென் பேன்.

(உரை) மன்மதனைப் பூசித்து அனுபவிக்கும் சுரத சுகானுபவத்தை வளர்க்குந் தாய்போன்றது இளம்பிராயம். இன்னும் அதுவே இலக்குமிபோல் அழகு நிரம்பிய மங்கைமார் கண்களுக்கு

இன்பம் அளிக்கும். இப்படிப்பட்ட இளமையைப் பெற்ருரில் எவனே ஒருவன்தான் உத்தமனுயிருப்பவன். (30)

(வெண்பா)

தாமரைக்கண் மங்கை தனைக்கண்ட பண்டிதரும்
தாமுலுத்தர் பாலலுத்துத் தாழ்ந்தாலும்—ஓமென்றிப்
பொற்றெருடியைப் பெற்ருல் புகழ்பூண்போம் என்றெண்ணி
யுற்றுவகை பூப்பார் உகந்து.

(உரை) தாமரைக் கண்ணியைக் கண்ட பண்டிதர்களும் தாங்கள் உலுத்தரை யடுத்து மனமழிந்து வாழ்ந்திருந்தாலும் 'சரி' என்று விரும்பி, "இப் பொன் வளையை நாம் பெற்ரேமானல், புகழ் அடைவோம்" என்று எண்ணிச் சந்தோஷமடைந்து தம் நிலையை மறப்பார்கள். (31)

(வெண்பா)

கயிலாச மார்மலைமேற் கண்மூடி வாழும்
இயலாரும் யோகியரும் இன்ப—ஒயிலாரும்
மங்கையைக் கண்டளவில் மாமோக மெய்துவார்
தங்கள் தவமிழப்பார் தாம்.

(உரை) கயிலாசமலைமேல் கண் மூடி யோகத்திருக்கும் உத்தமர்களும் இன்பரஸச் சாயலுள்ள மங்கைப்பருவ மாதைக் கண்டவுடன் தங்கள் தவங்கள் இழந்து பெருமோகத்தில் ஆழ்வார்கள். (பெண்கள் இல்லையானல் எல்லாருந் தவஞ் செய்யலாம்.) (32)

(வெண்பா)

மாதர்கள் மூலமாய் மன்னுசமு சாரத்தில்
ஏதமுடன் கூடி இருப்பதன்றி—மாதர்கள்

இன்றேல் சமுசாரம் இன்றும் அதைவிடுதல்
அன்றே வெகுசுலப மாம்.

(உரை) பெண்கள் மூலமாய்ப் பொருந்திய சமுசாரத்திற் கூடிக் கஷ்டத்தோடிருக்கவேண்டு மன்றி, மாதர்கள் இல்லையானல் சமுசாரம் இல்லையாம். அப்போதே அதை விடுதல் வெகு சுலபமாகும். (33)

3-வது அதிகாரம்

இருபக்கச் சிறப்பு

(பெண்களின் உறவு துறவு என்னும் இருபக்க வர்ணனை)

(வெண்பா)

துறவை விரும்பினல் தோய்வாய் வனத்தில்
உறவை விரும்பினல் ஓங்கில்—லறமுகந்து
தாம்பூல மங்கைக்குத் தந்துமகிழ் வாய்மைந்தா!
ஓம்பி இதைநீ உணர்.

(உரை) மங்கையைத் துறக்க விரும்பினல் மைந்தனே! நீ, வனஞ்சென்று தவஞ்செய். அவளோடு கூடியிருக்க விரும்பினல், அவளுக்குத் தாம்பூலம் ஆய்ந்து மடித்துக் கொடுத்து இல்லறத்தில் உகந்து வாழ். இதை நீ தேர்ந்தறிவாயாக. (34)

(வெண்பா)

பிறர்க்குதவி செய்தல் பெரும்புண் ணியமாம்
தறைக்குள் அதுசமு சாரம்—சிறக்கச்செய்
சேயிழைசேர்ந் தேயர்கும் சிற்றின்பம் சின்னீர
தாயினுங் கைவிடலர் கா.

(உரை) பிறர்க்கு உபகாரம் புரிதலே பெரும் புண்ணியமாகும். இந்தப் பூலோகத்தில் அது சமுசாரம் சரியாய்ச் செய்யக்கூடிய கற்புடைய மங்கையின் சேர்க்கையாலேயே கைகூடும். ஆகையால், சிற்றின்பம் முதலில் அற்பசுகந் தருவதானாலும் அதை நீ கைவிடக் கூடாது. (35)

(வெண்பா)

ஏதுசெய்வீர் பண்டிதர்காள் இங்குளமா தங்கப்
புதுநிதம்பங் கோருவிரா பூமேல்—விதுதவழ்மா
தங்க நிதம்பம் தனைக்கோரு வீராநீர்
இங்கெனக்குச் சொல்வீர் இசைந்து.

(உரை) ஏ, பண்டிதர்காள்! உலகில் நீவிர் நாட்டிலுள்ள மாது அங்க நிதம்பத்தை இச்சிப்பீரா? சந்திரன் தவழும் மாதங்க (மலை) நிதம்பத்தை (இடத்தை) இச்சிப்பீரா? எது செய்வீர்கள்? எனக்கு விடை கூறுங்கள்! (36)

(வி - ரை) மாதங்கம்=மாது+அங்கம்; மலை.
நிதம்பம்=மலையிடம்
நிதம்பம்=தொடைக்கும் இடைக்கும் நடுவிடம்.

(வெண்பா)

தத்துவந்தேர் ஞானந் தமக்கில்லை யாகுமேல்
நித்தியமும் மாதர் நிதம்பமே—முத்தியென்று
கொள்ளச் சரியாகும் கூறுசமு சாரத்தில்
கொள்ளத் தகுமிரண்டு கூறு.

(உரை) சமுசாரத்தி லிருந்தும் உண்மை யாராய்ச்சி ஒன்று, மாதர் நிதம்ப இச்சை ஒன்று. இவ் விரண்டில் முன்னைய தில்லையேல் பின்னையதே பெரும்பற்றுக் கொள்ளல் சரியாகும். கஷ்ட

மென்று கூறும் சமுசாரத்தில் இந்த இரண்டு விதங்களும் கொள்ளத் தக்கவைகளாகும். (37)

(வெண்பா)

குளித்தால் கங்கை குளிக்க சுகத்திற்
களித்தால் மடமங்கை காதல்—அளிக்கவிருந்
தன்னவ ளோடுசமு சாரத்தில் யோக்கியமாய்
மன்னி யிருக்க மகிழ்ந்து.

(உரை) துறவியாய்ப் பாவ நீக்கவேண்டிக் குளித்தால் கங்கையிற் குளி. சமுசார சுகானுபவம் வேண்டினுல் உண்மைக் காதலையளிக்கும் உத்தமியோடு கூடி ஒருமுத்தமீ யென்று நாடி யோக்கியமாய்ப் பொருந்தி யிருக்கக்கடவாய். (38)

(வெண்பா)

மார்பின் பளுவால் வணங்குமிடை மங்கையரைச்
சேர்ந்திருந்து வாழ்வதொன்று சேராமற்—சேர்வரிய
காட்டகத்தில் வாழ்வதொன்று காதலுடன் ஏதேனும்
வீட்டகத்தில் இச்சைவைத்து வேண்டு.

(உரை) வீட்டகத்தில் (இல்லற வீட்டில்) இச்சை வைத்தவன் மார்பின் பளுவால் வணங்கு மிடையுள்ள மங்கையரைச் சேர்ந்து வாழக்கடவன். வீட்டகத்தில் (மோக்ஷவீட்டில்) இச்சை வைத்தவன் துறந்து சென்று காட்டகத்தில் வாழக்கடவன். (39)

(வி - ரை) வீடு=இல்=இகசுக வாழ்க்கை வீடு.
வீடு=மோக்ஷம்=பரசுக வீடு.

(வெண்பா)

பற்றுற்ற போதுலகில் பாவையர்கள் நேசம்போல்
உற்ற சுகந்தருவ தொன்றில்லை—பற்றற்ற

பின்ன ரதுபோல் பெரும்பீழை காரணமாம்
என்ன பொருளும் இல.

(உரை) (வைராக்கியம் இன்மையால்,) ஆசை அதிகரித்த போது இவ் வுலகில் பெண்களோடு கூடி வாழும் வாழ்க்கையைப் போலப் பொருந்திய இன்பந் தரவல்லது வேறொரு பொருளும் இல்லை. (வைராக்கியம் உண்மையால்,) ஆசை யற்றபிறகு அப் பெண்ணாசையைப் போலப் பெருந் துன்பகாரணமாகிய பொருள் கள் எவையும் இல்லை. (40)

4-வது அதிகாரம்

பெண்களின் வல்லமை

(வெண்பா)

தோற்பதுமை போலுந் துடியிடையைக் கண்டக்கால்
நாற்சதுரப் பாவுணர்ந்த நாவலனும்—ஏற்புடைய
தேன்மொழியே! மீன்விழியே! சீதேவி யேயென்று
தான்துதிப்பான் பெண்மயக்கத் தால்.

(உரை) தோல்பொம்மை போன்ற பெண்ணொருத்தியைக் கண்ட கவிஞனாகிய பண்டிதனும் 'எனக்கு உகந்த தேன்மொழிப் பாவையே! மீன்விழிப் பூவையே! சீதேவியே! மாதேவியே!' என்று துதிப்பான் என்றால், பெண்மயக்கத்தின் வல்லமையே வல்லமை! (41)

(வெண்பா)

கண்டால் மயக்கும் கருத்தில் உறநினைத்துக்
கொண்டால் வருத்துமுற்றுக் கூடினால்—அண்டாத
சோகமுண் டாக்கும் துடியிடைமெய் யன்னவளைப்
போகமுண் டாக்கு மெனல்பொய்.

(உரை) உடுக்கை இடையுடைய மங்கையின் மேனி: கண்டால் மயக்கும்; மனத்திற் பொருந்த நினைத்துக்கொண்டால் வருத்தும்; தொட்டுக் கூடினால் பெருஞ் சோக முண்டாக்கும். ஆகையால், அப்படிப்பட்டவளை நாம் சுகம் கொடுப்பவள் என்பதெல்லாம் சுத்தப் பொய். (42)

(வெண்பா)

கண்ணுக் கெதிரிலிருக் கின்றமட்டும் காரிகைதான்
எண்ணற் கரியவின்பம் ஈயுமால்—கண்ணுக்குத்
தோன்றாத போதுவிடம் தோய்ந்ததுபோ லேதுன்பம்
தான்றருவாள் கூட்டுறவைத் தள்.

(உரை) கண்ணுக் கெதிரி லிருக்கின்றவரையிலுமே சுந்தரி அளவற்ற இன்பத்தைத் தருவாள். கண்ணுக்கு மறைவாயிருந்தால் விஷம் பாய்ந்ததுபோலத் துன்பத்தைக் கொடுப்பாள். அப்பேர்ப்பட்டவளுடைய உறவைத் தள். (43)

(வெண்பா)

பெண்ணன்றி வேறு பெரிய விடமமுதம்
மண்ணுலகி லில்லை மனமொத்து—நண்ணுகின்ற
உள்ளன்பி லாதாளே ஓங்குவிட மாரமுதம்
உள்ளன் புடையாளென் றோர்.

(உரை) பெண்ணே பெரு விடமாம்; பெண்ணே பேரமுதமாம். அவள் அன்றி வேறு விடமும் இல்லை; அமுதமுங் கிடையாது. கணவனோடு பொருந்தும் உள்ளன்பிலாதவளே உயிரை வாங்க ஓங்கும் விடமாம்; உள்ளன்புடையவளே பொருந்திய அமுதமென்று தெரிந்துகொள். (44)

(வெண்பா)

வஞ்சனைக்குக் கொள்கலனும் மாநரக ஊர்வழியாம்
எஞ்சா அமுத மெனும்விடமாம்—அஞ்சா
மனம்படைத்த மாதரெனும் மாயயந்தி ரங்கள்
தினம்படைத்தான் ஏன்பிரமன் தேர்ந்து.

(உரை) வஞ்சனையை யிட்டுவைக்கும் பாத்திரம்; நாக நகரத்திற்குச் செல்லும் வழி; குறைவில்லாத அமுதமென்று பேரிட்டழைக்கும் விஷம். ஆகையால், அஞ்சா நெஞ்சுடையவர்களாகிய மாதரென்னும் மாய யந்திரங்களைப் பிரமன் கை தேர்ந்து, விடாமல் ஏன் படைத்தானோ தெரியாது. (45)

(வெண்பா)

விவேக மெனும்புருஷன் மெய்யுணர்ந்துங் கெட்ட
விவேகியாய் மாதுமெய்யை வேண்டித்—துவேஷமின்றித்
தாமரைபொன் சந்திரனேர் தையலின்கண் மேனிமுகம்
ஆமெனத்தான் மோசம்போ வான்.

(உரை) விவேகம் என்னும் ஒருவன் தத்துவந் தேர்ந்தோனாயினும் மாதர்களைக் கண்டளவிற் கெட்டு, அவிவேகியாய் அவர்களை விரும்பிக் கொஞ்சமேனுந் துவேஷமின்றிப் புலவர் புகழ்தலை நம்பித் தையலின் கண் மேனி முகம் முறையே தாமரை பொன் சந்திரனும் என்று மோசம் போகின்றான். (இது வியப்பு என்றபடி.)

(வி-ரை) தாமரை-கண்; பொன்-மேனி; சந்திரன்-முகம்; நிரனிறைப் பொருள்கோள். (46)

(வெண்பா)

வண்டுகள் வேலையின்றி வாரிசத்தின் செந்நிறத்தைக்
கண்டுழலு மாறுபோற் காமுகர்கள்—பெண்டுகளின்
கட்கடையின் நோக்கமொயில் கண்டவர்க ளின்மயங்கிக்
கெட்டுத் தவிப்பார் கிடந்து.

(உரை) வண்டுகள் தமக்கு வேறு வேலை யின்றித் தாமரை மலரின் செந்நிறத்தைக் கண்டு அலைந்து திரிகிறபடி, காமம் பிடித்த ஆண்மக்கள், பெண்மக்களுடைய கடைக்கட் பார்வை ஒயில் முதலியவைகள் அவர்களுக் கியற்கையென் றுணராமல், அவைகள், தம்மைக் குறித்தனவென் றெண்ணி மதிமோசம் போய், அவர்களின் மயக்கத்திற் கிடந்து, வேறு வேலை யின்றிக் கேடுகெட்டுத் தவிப்பார்கள். (47)

(வெண்பா)

வயதில் முழுமதிபோல் வாய்ந்துமுது மைக்கண்
இயலுநுங்கு சூர்பனங்காய் என்னப்—பயிலுமுகங்
கொண்டமங்கை சேர்க்கை கொடிது கொடிதந்தோ
தண்டாத் துயரந் தரும்.

(உரை) இளமையிற் பூரணச் சந்திரன்போல் அமைந்து முதுமையில் நுங்கு சூர்ந்த பனங்காய்போல் கண் குழிந்து ஆழ்ந்தமுகங் கொள்ளும் பெண்களின் சேர்க்கை பெரிதும் துயரந் தருவதால் மிகவுங் கொடிது. (48)

(வெண்பா)

பெண்டுக ளென்கின்ற பேராற்றில் மூழ்கினுற்
கொண்டுசமு சாரக் குரைகடலிற்—றண்டாமல்
தள்ளியுனை மாய்த்துவிடும் சாக்கிரதை யாயதைநீ
எள்ளிவிட்டு நீங்கி இரு.

(உரை) பெண்மக்கள் என்கின்ற பெரிய நதியிற் குளித்தால், அது உன்னை அடித்துக்கொண்டு போய், சமுசார சாகரத்தில் தவறாமல் தள்ளிக் கொன்றுவிடும். ஆகையால், அதி சாக்கிரத்தை யாய் அதை நீ இகழ்ந்துவிட்டு அப்பாலே இரு. (49)

(வெண்பா)

ஒருவ னிடத்தில் ஒருவாறு பேசி
ஒருவ னிடத்திற்கண் ஓட்டி—ஒருவன்
இடத்தில் மனஞ்செலுத்தும் ஏந்திழைமார் அன்பு
படைக்க ஒருவனிலை பார்.

(உரை) ஒருவனிடத்தில் ஒருவிதமாய்ப் பேசுவார்கள்; ஒருவனிடத்தில் பார்வையைச் செலுத்துவார்கள்; ஒருவனிடத்தில் மனம் வைத்திருப்பார்கள். ஆகையால், மாதர் உண்மை யன்பு வைத்திருப்பவன் ஒருவனும் இல்லை. இதை நீ எண்ணிப் பார். (50)

(வெண்பா)

கண்களெனும்விடத்தைக் காட்டி யுனையாட்டும்
பெண்களெனும் பாம்பைப் பிரிந்தோடு—மண்வளையில்
மற்றையராத் தீண்டின் மருந்துண்டு மங்கையரா
உற்றவராத் தீண்டினில்லை ஒன்று.

(உரை) கண்களென்னும் விஷத்தைக் காட்டி உன்னை யாட்டுவிக்கும் பெண்களென்னும் பாம்புகளை விட்டு அப்பாலோடிப் போ! ஏனென்றால், புற்றில் வாழும் மற்றைப் பாம்பு கடித்தால் மந்திரவாதிகளிடத்தில் மாற்று மருந்துண்டு. மங்கையராகப் பொருந்தியுள்ள பாம்புகள் கடித்தால் அதை மாற்ற யாதொரு மருந்துங் கிடையாது.

(வி - ரை) புற்றுப்பாம்பை நீ பிடித்து ஆட்டுகிருய்; பெண்களென்னும் பாம்பு உன்னைப் பிடித்து ஆட்டுகின்றன. (51)

(வெண்பா)

குடும்பக் கடலிற் குளிக்குமாண் மக்கள்
நெடும்பெரிய மீன்கள் நிசமாய்த்—துடியிடையார்
ஆந்தூண்டி லின்கண் அழகா மிரையைநச்சிச்
சாந்திறத்தர் லாமெனநீ சாற்று.

(உரை) சமுசார சாகரத்தில் மூழ்கி வாழும் ஆண்மக்கள், உடுக்கையிடை மாதர் என்னுந் தூண்டிலில் அவர் அழகென்னும் இரையை விரும்பிச் சென்று, அதனில் அகப்பட்டுச் சாவதால், பெரிய மீன்களுக்குச் சமானமா யிருக்கிருர்கள் என்று நீ நிச்சயமாய்ச் சொல்.

(வி - ரை) சமுசாரத்தில் ஆண்மக்களாம் மீன்கள் பெண்களென்னுந் தூண்டிலுக்குத் தப்பிப் பிழைக்க வழிதேட வேண்டும். (52)

(வெண்பா)

பெண்களுடம் பென்னும் பெருங்காட்டில் மார்பென்னுங்
கண்ணகன்ற மேடு கலந்திருக்கும்—உண்ணிலவி
மன்மதனுங் கள்ளன் மகிழ்ந்திருக்கின் ருன்மனமே!
நின்னைவலிப் பான்போகேல் நீ.

(உரை) பெண்களுடைய உடம்பாகிய காட்டில் அவர்கள் மார்பாகிய பெருமேடு செறிந்திருக்கின்றது. அதற்குள் மறைந்து மன்மதனுங் கள்ளன் மகிழ்ந்திருக்கின்ருன். ஓ மனமே! நீ அங்கே போனுல் உன்னை யவன் இழுத்துக்கொண்டு போய்விடுவான். ஆகையால், நீ அங்குப் போகாதே. (53)

(வெண்பா)

உண்மையராத் தீண்டின் ஒருதீங்கும் இல்லைகருங்
கண்மை யணிந்துவளர் காரிகையார்—பெண்மைதிகழ்
பாம்பு கடிக்கின் பலதீங்கும் உண்டாகும்
ஓம்புவா ரில்லை உனை.

(உரை) உண்மையாகவே உன்னைப் பாம்பு கடித்தாலும் மணி மந்திர ஔஷதங்களால் விஷந் தீரும்; அதனல் ஒரு தீங்கும் இல்லை. கருமையாகிய கண் மை தீட்டி மிகுந்த அழகுடைய பெண்களென்னும் பாம்பு கடிக்கின் பல தீங்கும் உண்டாகும். உன்னைக் காப்பார் ஒருவரும் இல்லை. (54)

(வெண்பா)

பஞ்சேந் திரியங்கள் பற்பலவா றென்னையிந்த
நஞ்சே யனையவெழில் நங்கையின்பத்—தஞ்சாமல்
வீழ்த்தி வருத்தும் விதமுணர்ந்தேன் என்னையவை
தாழ்த்துஞ்சூ தேசூது தாம்.

(உரை) மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம் பொறிகளும் பலவிதமாய் என்னை யிந்த விஷம் போன்ற அழகுடைய மங்கை யின்பத்தில் சற்றேனும் அஞ்சாமல் தள்ளி வருத்துந் தன்மையை உணர்ந்தேன். என்னை யவைகள் வாழவைப்பது போல் தாழவைக்கும் தந்திரமே தந்திரம்! (அதை நான் இப்போதே கண்டுகொண்டேன்.) (55)

(வெண்பா)

மணிமந்தி ரௌஷதத்தில் மாறுப்பெண் மோகம்
தணியா மயக்கந் தருமே—பிணிபோலக்
கால்கைகள் சோரவிரு கண்சுழலச் சித்தத்தில்
மால்பெருக்கும் இல்லையொரு மாற்று.

(உரை) மணி மந்திரம் ஔஷதம் என்னும் மும்மை வழியாலும் தீராத பெண் ஆசை குறையாத மயக்கத்தைக் கொடுக்கும்; கைகால்கள் சோர்வடையக் கண்களைச் சுழற்றும். மனமயக்கை வளர்க்கும். இதற்கு மாற்றில்லை. (ஆகையால், நான் என்ன செய்வேன்?) (56)

(வெண்பா)

பிறவிக் குருடன் பெருங்குஷ்ட ரோகி
உறவுக்குந் தன்மனம் ஒத்துப்—பெறுவாள்
பணமதனுல் வேசையின் பாழுறவைச் சான்றோர்
பிணமுயக்க மென்பார் பிரித்து.

(உரை) பிறவிக்குருடன் பெரிய குஷ்டரோகி முதலியோர்களுடைய உறவுக்குஞ் சம்மதப்பட்டுப் பணம் பெறும் வேசையின் பாழான உறவு கீழானது; பிணத்தோடு சேர்வதுபோ லாகும் என்று சான்றோர் அதைக் குலமகள் உறவினின்று வேறு பிரித்துக் கூறுவார்கள். (ஆகையால், புத்திமான் விலைமாதரைக் கண்ணாலே பார்க்கவுங் கூசுவான்.) (57)

(வெண்பா)

மதன நெருப்பில் வடிவாஞ் சமிதை
பதன முடன்விலைப் பாவை—விதம்விதமாய்
இட்டெரிக்கின் றுளதிற்றம் யௌவனம்பொன் னுமிழுதை
விட்டெரிக்கின் றுர்கள் விடர்.

(உரை) மதனுக்கினி மயமாகிய விலைமாது தன் அழகென்னும் சமிதையை அந்த அக்கினியில் பத்திரமாயிட்டுப் பலவிதமாய் எரிக்கின்றுள்; அதில் விடபுருஷர் (காமுகர்) தமது இளமை பொன் என்னும் நெய்யை விட்டு வளர்க்கின்றுர்கள். (58)

(வெண்பா)

குலவீனன் வஞ்சகன் குண்டன் வெறியன்
உலகில் எவனும் உயர்ந்தோன்—கலகவிழி
வேசைக்கா வானதனுல் மேற்குலத்தோன் சேர்ந்தவள்
ஆசைக்கா ளாகான் அழிந்து.

(உரை) தாழ்ந்த குலத்தோன், சூதன், கலகப்பிரியன், குடிவெறியன், இன்னும் உலகில் தாழ்ந்தோன் எவனும், கலகக் கண்ணையுடைய விலைமகட்கு உயர்குலத்தோ னுவான். ஆகையால், உயர் குலத்தோன் அவளைச் சேர்ந்து மானமழிந்து அவளுடைய ஆசைக்கு ஆளாகான். (59)

(வெண்பா)

வாக்கில் அமுதாம் மனத்தில் விஷமிருந்து
தேக்குமாம் வேசையர்க்குத் தேர்ந்திதனைப்—போக்கிலிகள்
ஆகும் விடர்கள் அவரிதழ்த்தேன் உண்டுரத்தைச்
சோகமுடன் குத்துவார் தோய்ந்து.

(உரை) வேசையர்க்கு வாக்கில் அமுத மிருக்குமாம்; மனத்தில் விஷமிருந்து தேக்குமாம். அதை யறிந்த போக்கிலிகளாகிய காமுகர்கள் அவர்களுடைய உதட்டில் ஊறும் தேனை உண்டு, மார்பை மயக்கத்தோடு கூடிப் பிசைந்து குத்துவார்கள். (60)

5-வது அதிகாரம்

போலித் துறவு

(வெண்பா)

காதளவர் நீண்டவிழி கட்டழகி னேடிளமை
ஊதி யகன்மார் புடையமங்கை—மீதெவனிங்
கிச்சைவையான் அன்னுன் இகபர சாதனங்கள்
நிச்சயமாய்ப் பெற்றுய்வான் நேர்ந்து.

(உரை) காதளவு நீண்ட கண்கள், மிகுந்த அழகு, இளம் பிராயம், வீங்கி யகன்ற மார்பு இவைகளையுடைய மங்கைப் பருவத்துப் பெண்ணைக் கண்டு அவள்மீது எவன் ஆசைவைத்து வாடானே, அவன் இகலோக பரலோக சுகசாதனங்கள் வரப்பெறும் புண்ணியவானுய்க் கடைத்தேறுவான். (61)

(வெண்பா)

ஒயிலாயுன் கண்பார்வை ஒட்டியெமை வாட்ட
இயலாதுன் னுல்நங்காய் இன்னும்—மயலாலே
வாடோம் முதுமையுற்ருேம் வன்காட் டகஞ்சேர்வோம்
நீடோம்பே ராசை நிலைத்து.

(உரை) எ, பெண்மையிற் சிறந்த மாதே! உன் கண்பார்வையை அழகாய் எங்கள்மேல் செலுத்தி வருத்த இன்னும் உன்னுல் முடியாது. எனென்ருல், நாங்கள் பெண் மயலாலே வாடமாட்டோம்; வயது முதிர்ந்து மூத்தோம்; கடுங்காட்டில் தவஞ்செய்யச் செல்லுவோம். இனிப் பேராசையில் நிலைத்து நிற்கமாட்டோம். (62)

(வெண்பா)

பாங்கா! இப் பைங்தொடிதன் பானற்கண் பார்வையினல்
ஈங்கெம்மை வாட்டுமிது வென்னேயோ—நாங்கள்
இவள்சாய லுக்குருகோம் இன்பத்தை நீத்தோம்
இவளெமையேன் பார்ப்ப தினி.

(உரை) "பாங்கனே! இந்தப் பைந்தொடி மான் மருண்டு தனது நீலக்கண் பார்வையால் இப்போது எங்களை வருத்துங் காரணம் என்ன? நாங்கள் இவள் இள மயிற் சாயலுக்கு உருகமாட்டோம்; சிற்றின்பம் வெற்றின்ப மென்று வெறுத்துவிட்டோம். இன்னும் இவளேனே எங்களைப் பார்த்தபடி யிருக்கவேண்டும்."

(வெண்பா)

பூங்குயிலும் மன்மதனும் பூண்டெம்மை வாட்டுகின்ற
தீங்குகள் தாம் என்ன இனிச் செய்யுமெமை—நாங்கள்
மலைவில்லிக் கன்புசெய்வோம் மன்மதா! நின்காசு
செலவில்லை அப்பாலே செல்.

(உரை) "அழகான குயிலும் மன்மதனுங் கூடி வருத்துவதனால் நேரிடுகின்ற கெடுதிகள் எம்மை இனி என்ன செய்யும்? (ஒன்றுஞ்செய்யா.) நாங்கள் முன்போ லில்லை. குன்றவில்லியாகிய சிவனடியா ராகிவிட்டோம். ஏ, மன்மதா! நின் காசு இனி எம்பாற் செல்லாது. அடா அப்பாலே போ!" என்றார் ஒரு துறவி. (64)

(வெண்பா)

அன்பாய் மனங்கலந்த ஆண்பெண் அகன்றிருந்தும்
இன்பாய் அருகில் இருப்பவராம்—வன்பாய்
மனம்பிரிந்த மக்கள் மருவியிருந் தாலும்
இனம்பிரிந்தா ராவா ரிழிந்து.

(உரை) அன்பின் உறுதியால் மனங் கலந்த ஆண்பெண்கள் தூர இருந்தாலும் சந்தோஷமாய் அருகிலிருந்து வாழ்பவர்களுக்குச் சமானமாவார்கள்; உள்ளன்பில்லாமல் மனம் வேறுபட்ட ஆணும் பெண்ணும் கூடியிருந்தாலும் அக் கூட்டத்திற் பிரிந்து மனமழிந்து தாழ்ந்து வாழ்பவர்களுக்குச் சமான மாவார்கள். (65)

(வெண்பா)

இனியென் தலைவி யிருந்தென் இறந்தென்
இனிநான் துறவி யிதனால்—இனிநானும்
வீட்டிலிருந் தாலென் வெளியிலிருந் தென்னென்றோர்
பாட்டையிற்போ வோன்சொன்னான் பார்த்து.

(உரை) "இனி என் காதலி யிருந்தென்ன? இறந்தென்ன? இனி நான் முன்போலின்றித் துறவியானேன். ஆகையால், இனி நான் வீட்டுக்குள் இருந்தாலென்ன? வெளியிலிருந்தா லென்ன?" என்று ஒரு பாட்டைசாரி (வழிப்போக்கன்) யோசித்துப் பார்த்துச் சொன்னான். (அதுபோலவே அவன் தன் வீட்டுக்குப் போகாமல் இருந்தான்.) (66)

(வெண்பா)

பெண்ணாசையிற் றீர்ந்து பெருங்கருணை யன்பறிவோ
டெண்ணுடிக் கூடி யொழுகுங்கள்—பெண்ணாசை
போக்காதாம் உம்மைப் பெருநரக வேதனையிற்
றீர்க்காது பாவச் செயிர்.

(உரை) பெண்ணாசையை விட்டுப் பெரிய ஜீவகாருணியம் அன்பு ஞானம் என்னும் முப்பெருஞ் சற்குணப் பெண்களோடு கூடி வாழுங்கள். (பால் வீடாகிய மார்பையும் இடையையும் உடைய) பெண்ணாசை உங்களை நரகவேதனையினின்றும் நீக்குமா, பாவங்களாகிய குற்றங்களுக்குப் பரிகாரமாமா? (ஆகாது.)

(வி - ரை) கருணை, அன்பு, ஞானம் என்பன முறையே தாய், தங்கை, மனைவி போல்வனவாம். (67)

(வெண்பா)

எவன்யோக நிஷ்டையில் ஈடுபட்ட ஞானி
அவன்பெண் முகமார்பில் ஆசை—உவந்துவையான்
நிஷ்டையி லேயே நிலைத்திருந்து பித்தனென
இஷ்டம்போல் வாழ்வான் இருந்து.

(உரை) எவன் யோகசமாதி கைகூடி உயர்ந்த ஞானியாயிருக்கின்றானோ, அவன் பெண்களின் முகம், மார்பு முதலியவைகளில் மயங்கி ஆசை வைக்கமாட்டான். நிஷ்டையிலேயே நிலையாயிருந்து பித்தனைப்போலத் தன் இஷ்டப்படி இருந்து வாழ்நாளைக் கழிப்பான். (68)

(வெண்பா)

மன்மதன்றன் மாயத்தால் மாநிலமெல் லாமெனக்குத்
துன்புதரும் பெண்ணுருவாய்த் தோற்றியதால்—பின்புமெய்ஞ்
ஞானமெனு மைதீட்டி நான்பார்க்கின் றேன்பிரம
ஊனமிலாச் சோதி உரு.

(உரை) மன்மத விகாரத்தால் இந்தப் பூலோகமெல்லாம் எனக்குத் *துன்பந் தரும் பெண்ணுருவாய்த் தோற்றியது. பிறகு நான் ஞானமை தீட்டிப் பார்க்கின்றபோது எங்கும் குறைவற்ற பரப்பிரமஜோதி சொரூபத்தைக் காண்கின்றேன். (69)

(வெண்பா)

பண்டிதனே யானாலும் பைந்தோடியார் தம்முருவைக்
கண்டுமயங் காதமட்டும் கௌரவமாய்—விண்டுநன்மை

* துன்பந் தரும் என்றது துறவு பூண்ட பிறகு.

தீது பகுத்தறியும் தீபனு வான்மயங்கின்
ஓதவனுந் தீர்வான் உணர்வு.

(உரை) பண்டிதனுயினும் பாவையர் வடிவத்தைக் கண்டு மயங்காதிருக்கும்வரையில் பெருமையோடு நன்மை தீமை பகுத்தறியும் ஞானியாயிருப்பான்; அப்படி மயங்கினுல், யாவரும் புகழ்ந் தேத்தும் அவனும் அறிவில்லாதவ னுவான். (70)

(வெண்பா)

பண்டிதர்கள் பேச்சுப் பரமவே தாந்தந்தாம்
ஒண்டொடியார் மோகம் ஒழியார்கள்—கண்டுமொழித்
தொண்டையிதழ்க் காரிகையார் தோற்றந் தனையுலகிற்
கண்டெவனும் அப்பாற்போ கான்.

(உரை) பண்டிதர்கள் பேச்சுமட்டும் பரமவேதாந்தமாக இருக்கும்; அவர்கள், பெண்ணுசையை ஒழியார்கள். இந்தப் பூலோகத்தில், கற்கண்டு போன்ற சொல்லையும் கோவைக்கனி போன்ற உதட்டையும் உடைய பெண்களைக் கண்டுவிட்டு யாரும் தூரத்திற் போய்விடமாட்டான். (சமீபத்திற் சேர முயலுவான் என்றபடி.)

(வெண்பா)

போலிவித்து வான்கள் புனையிழையார் நேசத்தைக்
கேலியாய் வீணே கிளத்துவார்—கோலியரு
மாதவஞ்செய் தாலுமிவர் வானுலகில் வாழரம்பை
மாதரையே சேர்வார் மதித்து.

(உரை) போலி வித்துவான்கள் "அலங்கார ஆபரணமணிந்த மாதர்நேசங் கூடாது" என்று அவர்களைப் பரிகாசஞ் செய்து வீண் பேச்சுப் பேசுவார்கள். (தவமே தகுதி யென்பார்கள்.) தவம் பூண்டு செய்தாலும் அவர்கள் அதன் பலனுகத் தேவலோக

மாதரையே மதித்துச் சேர்வார்கள். (இதுவே விதி. இதற் கென் செய்வார்கள்?) (72)

(வெண்பா)

ஆனை மதத்தை அடக்கி அதற்குமேல்
ஊனமில்சிங் கத்தை ஒடுக்குவார்—மானவர்கள்
மன்மதனார் வல்லமையை மாற்றுவா ரில்லையென்பேன்
என்னவிடை சொல்வார் இதற்கு.

(உரை) மானவர்கள் ஆனை மதத்தையும் அடக்குவார்கள்; அதற்குமேல் சிங்கத்தையும் ஒடுக்குவார்கள். மன்மதன் வல்லமையை மாற்றுகிறவர்கள் ஒருவரும் இல்லையென்று சொல்வேன். இதற்கு யார் என்ன விடை சொல்வார்களோ தெரியவில்லை. (73)

(வெண்பா)

எதுவரையில் ஆடவன்மே லேந்திழைகண் பாயா
ததுவரையில் நல்லவன் ஆவான்—அதுவரையில்
ஐம்புலனை வெல்லுவான் ஆன்றோர்க் கடங்குவான்
பம்பியவஞ் செய்யான் பரிந்து.

(உரை) எதுவரையில் ஆண்மகன்மேல் பெண்பிள்ளையின் விழியம்பு பாயாதோ, அதுவரையில் அவன் நல்லவனா யிருப்பான்; ஐம்புலனை அடக்கி ஆளுவான்; பெரியோர்க்கு அடங்கி நடப்பான்; நெருங்கிச் சென்று தகாத காரியங்களை விரும்பிச் செய்யமாட்டான். (74)

(வெண்பா)

மனத்தி லொருகரும மைவிழியார் செய்ய
நினைத்தால் அதனை நிறுத்த—அனைத்துலகும்
செய்து திகழ்பிரம தேவனுக்கு மாகாது
மெய்யிதுமெய் முக்காலு மெய்.

(உரை) மை தீட்டிய நெடுங்கண் மாதர்கள் ஒரு காரியத்தைச் செய்யவேண்டு மென்று தீர்மானித்தால், அதைத் தடுக்கப் பிரமதேவனாலு முடியாது; இது முக்காலும் உண்மையாம். (75)

(வெண்பா)

மதன நெருப்புடலில் மன்னு திருந்தால்
விதனமின்றி யாரும் வியன்பண்—டிதனவான்
அற்புதவா னவான் அருங்குலவா னவானோர்
சற்குணவா னவான் தழைத்து.

(உரை) மன்மத விகார நெருப்பு ஒருவனுடைய உடம்பிற் பற்று திருந்தால், அவன் எவனானாலும் பெரிய பண்டிதன் ஆவான்; மகத்துவ முடையவனவான்; உயர் குடியிற் பிறந்தவனவான்; குடும்பம் வளர்ந்து நற்குணம் உடையவன் ஆவான். (76)

(வெண்பா)

நாரியர்வேற் கண்கள் நரககபா டந்திறக்கும்
பேரியலுங் கோல்போற் பிறங்குவதால்— நாரியர்வாழ்
வோங்குசமு சார ஒலிகடலி லாழ்ந்தவர்க்குள்
தீங்கின்றி வாழ்ந்தவனர் செப்பு.

(உரை) பெண்களின் வேற்கண்கள் நரகவாயிற் கதவைத் திறக்கும் பெரிய கோல்போல் விளங்குவதனால், அவர்களுடைய வாழ்வாகிய சமுசார சாகரத்தில் வீழ்ந்து ஆழ்ந்த ஆண்மக்களில் தீங்கில்லாமல் வாழ்ந்தவன் யாவன்? நீ சொல்வாயாக. (77)

(வெண்பா)

உணங்கி முடமாய் ஒருகண் குருடாய்
அணங்கி னவிந்தகல்வா யாகி—வணங்கினவால்
அற்றநாய் பெண்ணாய்பின் அன்பாயோ டுங்காமற்
குற்றவன்மை யாரறிவார் ஓர்ந்து.

(உரை) சரீரம் மெலிந்து, கால் ஊனமாய், ஒருகண் தெரியாமல், நோயால் வாடி, திறந்த வாயுடையதாய், வளைந்த வால் அறுந்த ஆண் நாய், பெண்ணுயைக் கண்டவுடன் அதன் பின் அன்பாய் ஓடும். ஆகையால், மன்மதன் வல்லமையை யாரால் ஆராய்ந்து அறிவதற்கு ஆகும்? (78)

(வெண்பா)

மன்மதன்வென் றிக்கொடியாம் மங்கையரை நிந்தித்துத்
துன்மதிசேர் மாந்தர் துறப்பார்கள்—அன்னவரை
மன்மதன்கோ பித்து மழித்துமயிர் நீட்டிவிடும்
ஜென்மதண்டஞ் செய்வான் தெரிந்து.

(உரை) மன்மதனுடைய வெற்றிக்கொடி போன்ற மாதர்களைத் துஷ்டபுத்தியுள்ள ஆண்மக்களே துறந்துவிடுவார்கள். அப்படிச் செய்யும் அவர்களை மன்மதன் கோபித்து, அவர்களுடைய தலை மயிரை மழித்து மொட்டைத் தம்பிரான்களாக்கியும், அதை வளர்த்து நீட்டிச் சடைத் தம்பிரான்களாக்கியும் ஜன்ம தண்டனை தெரிந்து செய்வான். (79)

(கலிவெண்பா)

பராசனுங் கோசிகனும் பைந்தொடியார் தம்மால்
தராதலத்திற் பீடழிந்த தன்மை—அராவணிந்த
ஈசன் பெருமையிழந் தீடழிந்த தன்மையிவை
தேசமெங்கு நன்ருய்த் தெரிந்தவைதாம்—வாசத்
தயிர்பானெய் யோடன்னம் தக்கபடி யுண்போன்
செயிர்சேர் புலனடக்கஞ் செய்து—மயலறுத்தல்
ஆகாது குன்றம் அலைமேல் மிதக்குதலும்
ஆகாத வாறென் றறி.

(உரை) பராசர முனிவனும் விசுவாமித்திரனும் முறையே மச்சகந்தி மேனகை என்னும் மாதரால் இவ் வுலகில் மானமழிந்த தன்மையும், அரவாபரணனாகிய சிவன் தாருகாவனத்து முனிவர் மனைவியரால் பெருமையிழந்த மாண்பும் இந்தப் பூலோகமெங்கு நன்றாய்த் தெரிந்த விஷயங்கள்தாம். வாசனையான கட்டித் தயிர் பால் நெய்யோடு அன்னத்தைத் தக்கபடி உண்ணும் ஒருவன், குற்றமுள்ள ஐம்புலனடக்கிப் பெண்மயக்கத்தைப் போக்குதல் மலை, அலையில் மிதக்குதல் ஆகாது போலவே, ஆகாத காரியமாம். (80)

6-வது அதிகாரம்

இளவேனிற் காலச் சிறப்பு

(வெண்பா)

இளவேனில் வந்தவுடன் எல்லாம் அழகாய்க்
களகளவென் றோங்குமந்தக் காற்று—குளுகுளுவென்
றின்பமாய் வீசும் இளங்குயில்மாக் கோடுகளில்
இன்பமாய்க் கூவும் இருந்து.

(உரை) இளவேனிற் காலம் வந்தவுடன் எங்கெங்கும் சோலைகளும் பிறவும் அழகாய்த் தளிர்த்து களகளவென்று விளங்கும். மந்தமாருதமாகிய தென்றற் காற்று, குளுகுளு வென்று இன்பமாய் வீசும். இளங்குயில்கள் மாமரக் கிளைகளின்மேல் அழகாயிருந்து செவிக் கின்பமாய்க் கூவும். (81)

(வெண்பா)

மாவின் இளந்தளிரால் மந்தஇள மாருதத்தால்
கூவு குயிலின் குரலாலே—மேவுமிள

வேனில் விரகரை வீட்டுமகா லத்திலமு
தேனும் விடமாம் இழிந்து.

(உரை) மாமரத்தின் கொழுந்திலைகளாலும், மெதுவாய்ச் சில்லென்று வீசும் தென்றற் காற்றாலும், கூவுகின்ற குயிலின் குரலாலும், இளவேனிற் காலமானது, காமுகரை வருத்தும். அகாலத்திற் கிடைத்த அமுதமும் தாழ்ந்த விஷமாய்விடும். (82)

(வெண்பா)

கூவு குயிற்குரலால் கோதகன்ற வெண்ணிலவால்
பாவு கொடிபடர்ந்த பந்தலால்—மேவிரவிற்
பாவணர் கூட்டுறவாற் பன்னுசுகந் துன்னுவார்
மாவேனி லிற்சிலரே வாய்ந்து.

(உரை) கூவுகின்ற குயிலின் குரலாலும், மாசற்ற வெண்ணிலவாலும், பரவிப்படர் கொடியின் பந்தலாலும், பாவாணரோடு சொன்னயம் பேசிக் கூடியிருத்தலாலும் இரவிற் பொருந்திய சுகானுபவஞ் செய்பவர்கள் வேனிற்காலத்தில் சிலரேயாவார். (83)

(வெண்பா)

குயிற்பேடு மாமலரைக் கூறுமவி சென்று
வெயிற்கொதுங்கிப் பார்த்திருக்கும் வேனில்—இயற்கையிது
வாகை மலரை வழிப்போக்கன் மேல்வாரி
ஓகையொடு தென்றலிறைக் கும்.

(உரை) பெட்டைக் குயில் மாமலர்க் கொத்துக்களை யாக பலியென்று எண்ணி வெய்யிலுக் கொதுங்கிப் பார்த்திருக்கும். இது இளவேனிலின் இயற்கை விசேடம். தென்றற் காற்று வாகைமலரை வாரி வழிப்போக்கன்மேல் உல்லாசமாய் இறைக்கும்.

(வி - ரை) மாம்பூ யாகபலி யென்றால், மாந்தளிர் யாகாக்கினி. காமுகர்களுடைய விரகாக்கினியே யாகாக்கினி; அதில் இடும் ஆகுதியே மாமலர். (84)

(வெண்பா)

சக்களத்திக் காய்ச்சலால் தாங்கொண்ட கோபத்தை
மிக்க விளந்தென்றல் வீசுவதால்—மைக்குழலார்
மாற்றுவார் தங்கணவர் மன்னுமிடத் திற்செல்வார்
காற்றிற்கும் உண்டோர் கனம்.

(உரை) மாற்றாள்மேல் தாங்கொண்ட காய்ச்சலால், கணவன்மேல் கொண்ட கோபத்தைக் கருங்கூந்தல் மாதர், மிகவும் இனிய தென்றற்காற்று வீசுவதால், மாற்றித் தங்கணவர் தங்கியுள்ள இடத்திற்குச் செல்லுவார். இதனால் கண்ணுக்குத் தோன்றாத காற்றுக்கும் கோபமாற்றும் வல்லமை உண்டு என்பது புலப்படுகின்றது. (85)

(வெண்பா)

மாமரத்திம் பூக்கள் மணம்வீசும் வண்டுகள்தாம்
காமாப்பூந் தேனைக் களித்துண்ணும்—பாமரருங்
காற்றின்ப நாடிப்பூங் காவனத்திற் சேர்ந்திருக்கத்
தோற்றுமிள வேனிற் சுகம்.

(உரை) மாமரத்தினுடைய தேனமர் மலர்கள் மணம் வீசும்; வண்டுகள் சோலைகளிலுள்ள மலர்களின் தேனை உண்டு களிக்கும்; மூடர்களுங் காற்றுச்சுகத்தை விரும்பிப் பூஞ்சோலையிற் சேர்ந்திருப்பார்கள். இப்படி இளவேனிற் சுகம் விளங்கியிருக்கும். (86)

7-வது அதிகாரம்

முதுவேனிற் காலச் சிறப்பு

(வெண்பா)

புதுச்சந் தனமும் புனையிழையார் கூட்டும்
மதுச்சிந்து காவும் மதியும்—வெதுப்பையற
மாற்றுமிளந் தென்றலும் மல்லிகையும் மாளிகையுந்
தோற்றுமுது வேனிற் சுகம்.

(உரை) நறுமணங் கமழும் சந்தனமும், ஆபரணமணிந்த மங்கையரைக் கூடியிருத்தலும், தேன் சொரியும் பூஞ்சோலையும், சந்திரனும், வெதுவெதுப்பை மாற்றும் இளந்தென்றற் காற்றும், மல்லிகை மலரும், உப்பரிகையும் முதுவேனிலில் சுகந்தருவனவாம். (87)

(வெண்பா)

நல்லமணங் கொண்ட நறுமலரின் மாலிகையும்
சில்லெனுங்கால் வீசுஞ் சிவிறியும்—சொல்லரிய
வெண்ணிலவும் ஓதுமுது வேனிலின்கண் மங்கையரும்
புண்ணியர்க்கே எய்தும் பொருள்.

(உரை) நல்லமணம் வீசும் புதுப்பூமாலையும், சில்லென்று காற்று வீசும் விசிறியும், புகழ்தற்கரிய புது வெண்ணிலவும், மங்கைப் பருவத்துப் பெண்களும், உயர்வாகப் பேசும் முதுவேனிற் பருவத்தில், புண்ணியஞ்செய்தவர்களுக்கே கிடைக்கும் பொருள்களாம். (88)

(வெண்பா)

சுண்ணவெள்ளை தீற்றுச் சுவர்சூழ் உபரிகையும்
வெண்ணிலவும் சுந்தரஞ்சேர் மெல்லியலும்—நண்ணுமணப்

பொற்சுண்ணத் தூளும் பொருந்துமுது வேனிலின்கண்
நற்றவர்க்கென் செய்யு நலிவு.

(உரை) சுண்ணும்பு வெள்ளை பூசின சுவர்கள் சூழ்ந்த உப்பரிகையும், வெண்ணிலாவும், சுந்தரவதியான மங்கையும், வாசனை பொருந்திய பொற் சுண்ணப்பொடியும், முதுவேனிற் காலத்தில் நல்ல தவசிகளாகிய துறவிகளை வருத்தா. (இல்லறத்தானையே வருத்தும் என்றபடி.) (89)

8-வது அதிகாரம்

கார் காலச் சிறப்பு

(வெண்பா)

மல்லிகையின் பூமணக்கும் மன்மதற்கு வாழ்வுதரும்
சொல்லும் பயோதரங்கள் தோயுமிக—நல்ல
தெனினுங்கார் காலம் இலங்கிழையார் போல
கனிவாய்த் தராது களிப்பு.

(உரை) மல்லிகைப்பூ மணப்பதாலும், மன்மதற்கு வாழ்வைத் தருவதாலும், புகழ்ந்தோதும் (பால் வீடாகிய மார்பு) மேகங்கள் பொருந்தியிருப்பதாலும், கார்காலம் ஆபரணம் அணிந்த பெண்களைப் போன்றது; இன்பந்தருவது. ஆனாலும், அவர்களைப்போல அவ்வளவு மனங் கனிந்த மகிழ்ச்சி தராது. (90)

(வெண்பா)

மயிலகவும் காட்டுமலர் மல்லிகையின் வாசம்
பயிலும்புற் றீசல் பறக்கும்—வெயின்மூடி
மேகஞ் செறியுமிவை மெத்தக் களிப்பெவர்க்கும்
ஆகுங்கார் காலத் தமைப்பு.

(உரை) மயில்கள் ஆடும்; காட்டு மல்லிகை மலர் மணம் வீசும்; புற்றில் ஈசல் பறக்கும்; வெயிலை மேகம் மூடி மந்தாரமாயிருக்கும். இவைகள் யார்க்கும் இன்பந் தரும் கார் காலத்துப் பொருந்திய விசேடங்களாம். (91)

(வெண்பா)

மேகமயில் புற்றுகளின் மேற்காளான் மூன்றனும்
சோகமுறு வார்விரகர் சொல்லுங்கால்—வேகமாய்
மேலோடி ஆடி விரிந்துகார் காலத்தில்
மாலாடச் செய்யுமவை வாய்ந்து.

(உரை) மேகம், மயில், புற்றின்மேற் பூத்த காளான் ஆகிய மூன்றனும் விரகர்கள் சோகமுற்று வருந்துவார்கள். மேகம் அவர்கள், மேல் நோக்கும்போது கவிந்தோடியும்; மயில் அவர்கள், நடுவில் மலைப்பிரதேசங்களைப் பார்க்கும்போது ஆடியும்; காளான் அவர்கள், கீழே பூமியைக் கவனிக்கும்போது பூத்தும், கார் காலத்திற் பொருந்தி அவர்களுக்கு விரகவேதனையை உண்டாக்குகின்றன. (92)

(வெண்பா)

மின்ன லொருபால் மிகுபே ரிடியொருபால்
மன்னுசெங் தாழை மணமொருபால்—துன்னுமயில்
ஆட லொருபால் அமைந்தகார் காலத்தில்
கூடலையார் கொள்ளார் குறித்து.

(உரை) மின்னல்கள் ஒருபக்கம், மிகுந்த ஓசையுடைய பேரிடிகள் ஒருபக்கம், பொருந்திய மகிழம்பூ வாசனை ஒரு பக்கம், நெருங்கிய மயில்களின் ஆட்டம் ஒரு பக்கம், விளங்கியுள்ள

கார் காலத்தில் காதலர்களிற் கூடியிருப்பதை விரும்பாதவர்கள் யாவர்? (93)

(வெண்பா)

பேரிடி யோடு பெருமேகஞ் சூழ்ந்திருண்ட
கார்காலத் தூறல் கவிந்துமின்னல்—ஊருங்கால்
கூடியுள் ளார்மகிழ்வார் கூடாத காதலர்கள்
ஊடி யுளமழிவார் ஓய்ந்து.

(உரை) பேரிடிகளோடு பெருங் கருமேகஞ் செறிந்த கார் காலத் தூறல்மழை மின்னல்களில், கூடியுள்ள கணவன் மனைவியர் குதுகுலிப்பார்கள். கூடாதவர்கள் ஊடிப் பிரிந்திருந்து மனம் வாடி வருந்துவார்கள். (94)

(வெண்பா)

வாடை மழையால் வருந்துகின்ற பைந்தொடியார்
மேடையை விட்டிறங்கார் மெய்ந்நடுங்கி—ஆடவரைக்
கட்டித் தழுவுவார் கார்காலத் தன்னவரோ
டொட்டி யுறுவார் உவந்து.

(உரை) வாடைக் காற்று கொண்டுவரும் குளிர் மழையால் வருந்துகின்ற மாதர்கள் மாடியை விட்டுக் கீழிறங்காமல் உடல் நடுங்கிக் காதலரைக் கட்டித் தழுவிக்கொண்டு, கார்காலத்தில் அவர்களோடு சந்தோஷமாய்ச் சேர்ந்து பிரியாமல் இருப்பார்கள். (95)

9-வது அதிகாரம்

மழைக் காலச் சிறப்பு

(வெண்பா)

இரவிற் சுரத இளைப்பொழிய மங்கை
சரதமுடன் கொண்டுவந்து தந்த—இரதமுள்ள
தண்ணீரைக் *கர்க்கரிக்காய் தன்ஞெடுமா ரிக்காலத்
துண்பவனே தன்னியனென் ருேது.

(உரை) இரவில் நுகர்ந்த சுரதத்தா லுண்டாகிய இளைப்பு நீங்கும்படி, மங்கை யொருத்தி மனமுவந்து கொண்டுவந்து தந்த உருசியுள்ள குளிர்நீரைக் கக்கரிக்காயுடன் (வெள்ளரிக்காயுடன்) மாரிக்காலத்தில் மகிழ்ந் துண்பவனே பாக்கியவானுவான். (96)

10-வது அதிகாரம்

முன்பனிக் காலச் சிறப்பு

(வெண்பா)

முன்பனியில் ஆடவர்கள் மொய்குழலார் தம்மோடு
துன்பொழிய †மஞ்சிட்டித் தூசுகட்டி—இன்பமுடன்
குங்குமச் சாந்தணிந்து கூடி மகிழ்வார்கள்
துங்கமுறு தாம்பூலந் துய்த்து.

---

* கர்க்கரிக்காய்=என்பது கக்கரிக் காயென்றும், வெள்ளரிக் காயென்றும் வழங்குகிறது.

† மஞ்சிட்டி=ஒருவிதச் சாயவேர்.

(உரை) முன்பனியில் ஆண்மக்கள் நெருங்கிய கூந்தல் மாதரோடு துன்ப நீங்க மஞ்சிட்டிச் சாயந் தோய்த்த ஆடை யணிந்து, இன்பத்தோடு குங்குமச் சந்தனம் பூசித் தாம்பூலந் தின்று கூடிக் களிப்பார்கள். (97)

(வெண்பா)

மந்தார மாலிகையும் வாய்விரியு மொட்டுகளில்
வந்திருந்து தேனுண்ணும் வண்டுகளும்—நந்தாமற்
சேர்ந்திருக்கும் முன்பனியில் சேயிழையார் தம்மோடு
சேர்ந்திருப்போன் தேவனெனச் செப்பு.

(உரை) மந்தாரமலர் மாலையும், வாய் விரியத் தொடங்கும் அரும்புகளில் படிந்திருந்து தேனை உண்ணும் வண்டுகளும் கொடாமற் பொருந்தி யிருக்கும் முன்பனிக் காலத்தில், அழகான ஆபரணம் அணிந்த அரிவையரோடு கூடியிருப்பவன் மனிதனுயினும் தேவனுக்குச் சமானமாவான் என்று சொல். (98)

11-வது அதிகாரம்

பின்பனிக் காலச் சிறப்பு

(வெண்பா)

பின்பனிக் காலத்தில் பெய்வளையார் மேல்வீசி
அன்புடன் முத்தந்தந் தாடையவிழ்த்—தன்னவர்தம்
மெய்யைக் குலுக்கி மிகவசைத்து நாயகர்போல்
கையைப் பிடித்தாட்டுங் காற்று.

(உரை) பின்பனிக் காலத்தில் காற்று, வளைய லணிந்த மாதர்கள்மேல் வீசி, அவர்களுக்குக் குளிர்ச்சியாய் முத்தங் கொடு

த்து, அவர்களுடைய ஆடையைத் தளர்த்தி, தேகத்தை அசைத்துக் குலுக்கி, அவர்களுடைய நாயகர்போல் கையைப் பிடித்து ஆட்டும். (99)

(வெண்பா)

காரிகையார் தம்மேல் கடுமை யுடன்மோதி
வேரிமலர்க் கண்கள் விழிக்காமல்—ஏரியலும்
கூந்தல் குலையவும் கூறை யவிழவும்
காந்துமாம் பின்பனியிற் காற்று.

(உரை) பின்பனிக் காற்று, பெண்கள்மேல் வேகமாய் மோதி, அவர்களுடைய தாமரைமலர்க் கண்களை விழிக்கவொட்டாமற் செய்து, கூந்தலைக் குலைத்து, ஆடையை அவிழ்த்து அலங்கோலஞ் செய்து கோபிக்கும். (100)

பர்த்ருஹரி சிங்கார சதகம் உரை

முற்றுப்பெற்றது.

FIRST EDITION] [1000 COPIES.

உ

பரமபதி துணை

பர்த்ருஹரி சிங்கார சதகத்தின்

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

பர்த்ருஹரி சிங்கார சதகத்தின்
செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.

	அ.	ப.
ரிப்பன் காளப்பாட்டு ...	2	0
உரிச்சொல் நிகண்டு உரை	8	0
விடுகவி மஞ்சரி ...	2	0
ஸ்ரீ திலகர் விசாரணை ...	12	0
அறப்பளீசுர சதகம் உரை	12	0
குமரேச சதகம் உரை ...	1	ரூ
ஆத்திசூடிவெண்பா உரை	1	ரூபா
பிரகலாத சரித்திரம் ...	4	0
திருவள்ளுவர் சரித்திரம்	3	0
சமயகுரவர்நால்வர்சரித்ரம்	3	0
சாவித்திரி சரித்திரம் ...	1	0
மனமோகனராஜன் சரித்ர	1	6
புருஷத்வேஷபூதகி சரித்	1	6
கடன்பட்ட கந்தன் சரித்	1	0
அவிவேக பூரணகுரு கதை	1	6
பச்சையப்பமுதலியார்சரி	10	0
சங்கீத சாஸ்திர சரித்திரம்	4	0
சிதம்பர ரகஸ்யம் ...	1	0
கஜேந்திர மோக்ஷம் ...	2	0
இனிது நாற்பது உரை...	3	0
இன்னா நாற்பது உரை...	3	0
களவழி நாற்பது உரை...	3	0
கார் நாற்பது உரை ...	3	0
சிறுபஞ்சமூலம் உரை ...	12	0
நான்மணிக்கடிகை உரை	8	0
முதுமொழிக்காஞ்சி உரை	5	0
ஏலாதி உரை ...	6	0
திரிகடுகம் உரை ...	6	0
வியாதி மூலம் ...	0	6
பணவிடு தூது ...	2	0
டிஸ்கவுண்டு மாலை ...	1	6
காங்கிரஸ் மகாசபை ...	4	0
ஔவைகுறள் ...	2	0

	அ.	ப.
108 திருப்பதித்திருப்புகழ்	8	0
அஷ்டப்பிரபந்த மூலம்	12	0
நைடதமூலம் ...	1	ரூபா
சோணசைலமாலை உரை	12	0
நால்வர் நான்மணிமாலை மூலமும் உரையும் ...	12	0
திருவாரூர் நான்மணிமாலை மூலமும் உரையும் ...	8	0
உவமான சங்கிரகம் உரை	4	0
சதாசிவரூபம் உரை ...	4	0
சௌந்தரியலகரி உரை...	6	0
ஸ்ரீ கந்தரநுபூதி உரை ...	8	0
கந்தரலங்காரம் உரை ...	5	0
கந்தரந்தாதி உரை ...	8	0
கந்தர் சஷ்டி கவசம் உரை	5	0
ஸ்ரீ விநாயக கவசம் உரை	5	0
கல்வளையந்தாதி உரை ...	5	0
மறைசையந்தாதி உரை...	5	0
சரஸ்வதியந்தாதி உரை...	5	0
கபிலரகவல் உரை ...	3	0
வீரசைவ வினாவிடை ...	5	0
சைவ சமய விளக்க வினாவிடை, ஆசௌச வினாவிடை	8	0
பிரச்னோத்தரரத்னமாலிகை	2	0
பர்த்ருஹரிவைராக்யசதகம்	3	0
உபாயனார்த்த தீபிகை ...	0	6
பட்டணத்தார் பாடல் ...	2	0
பத்திரகிரியார் புலம்பல்	1	6
சிவராத்திரி மான்மியம்	5	0
தாலாட்டுப் பிரபந்தம் ...	4	0
ஸ்தலயாத்திரைபொதுவிதி	6	0
பரமாநந்த தீபம் ...	2	0
புஷ்பவிதி, புஷ்பபலன்	3	0

	ரு.	அ.
சிவக்ஷேத்திர விளக்கம்...	1	8
அஷ்டோத்ர சத நாமாவளி	0	4
ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரம் ...	0	2
ஸ்ரீ ராம சகஸ்ரம் ...	0	2
ஸ்ரீ சிவ சகஸ்ரம் ...	0	2
ஸ்ரீ விநாயகர் சகஸ்ரம்...	0	2
ஸ்ரீ சுப்ரமண்யர் சகஸ்ரம்	0	2
ஸ்ரீ லலிதா சகஸ்ரம் ...	0	2
ஸ்ரீ சங்கர விஜயம் ...	1	4
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்	1	12
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்	1	4
ஸ்ரீ ராமாநுஜ விஜயம் ...	2	0
ஸ்ரீ மாத்வ விஜயம் ...	1	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் விரிவான சரித்திரம்	2	0
ஷெயார் உபதேசரத்னங்கள்	2	0
ஸ்ரீ விவேகாநந்தர் விரிவான சரித்திரம்... ...	2	0
ஆத்திசூடிப்புராணம் உரை	2	0
பிங்கல நிகண்டு உரை ...	2	8
நாலடியார் உரை ...	2	0
ஸ்ரீபக்தலீலாம்ருதவசனம்	3	0
குசேலோபாக்யான மூலம்	1	0
கல்லாடம் உரையுடன் ...	3	0
பழமொழி அகராதி ...	2	0
கட்டளைப் பிரபந்தம் ...	0	8
நளவெண்பா உரையுடன்	1	8
நீதிநெறிவிளக்கம் உரை	0	10
வேதப்பொருள் விளக்கம்	0	12
தண்டியலங்காரம் உரை	1	12
சிவதருமோத்தரம் உரை	3	0
திருவெங்கைக்கோவை மூலமும் உரையும் ...	2	8

	அ.	ப
தமிழறியும்பெருமாள்கதை	6	0
நாலாயிரப் பிரபந்த சாரம்	8	0
ஒருதுறைக்கோவை ...	4	0
சீகாளத்திக் கலம்பகம் ...	2	0
யாப்பிலக்கண வினாவிடை	4	0
அணியிலக்கண வசனம்	4	0
வச்சணந்திமாலை உரை...	2	0
குடாரம்	1	0
அம்மணீயம், ஐயாசாமீயம்	8	0
ஜாதிபேத விளக்கம் ...	2	0
விஷப்பிரதி விஷத்திரட்டு	2	0
சைவசித்தாந்த வரலாறு	4	0
வேதாந்தசூளாமணி மூலம்	3	0
கைவல்யநவநீத மூலம் ...	3	0
சுகர் கைவல்யம் ...	3	0
ஏகாந்தசேவை ...	1	0
ஓங்காரத்தின் மகத்துவம்	1	0
அஷ்டாக்ஷர மகத்துவம்...	1	0
ஆரியர் சந்தியாவந்தனம்	1	0
மநுமுறைகண்ட வாசகம்	5	0
மஹாதேவ மாலை ...	2	0
நடராஜபதி மாலை ...	2	0
ஜீவசாக்ஷி மாலை ...	2	0
சிவானந்த மாலை ...	4	0
மாதரொழுக்க இலக்கணம்	3	0
பிள்ளைத் தாலாட்டு ...	0	6
திருமங்கல்யதாரணவிதி	0	6
பாரதநீதி	2	0
சிவசிவவெண்பாமுதலியன	8	0
நீதிவெண்பா விரிவுரை	4	0
நீதிசாரம் விரிவுரை ...	4	0
பஞ்ச தந்திரம் செய்யுள்	8	0
பஞ்ச தந்திரம் வசனம் ...	10	0